# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

**TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL**


# அனைத்துலகத் தேர்வு

# 2017

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 4

சுட்டெண்: | | | | | | | |

நேரம்: 120 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 05 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 05 | | | |
| 8 | 05 | | | |
| 9 | 15 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. மெய் எழுத்துகள் ______________________ .

( 216, 18, 247 )

2. ஒரு பக்கம் மட்டும் தோற்கண் உடைய முழவு ______________________ .

( உடுக்கு, மேளம், முரசு )

3. இராவணன்______________________ க் கொடியோன் எனப்

போற்றப்பட்டான்.

( புலி, வீணை, நந்தி )

4. நீ உனது பொருட்களை மட்டும் எடு! அவன் ______________________

பொருட்களை எடுப்பான்.

( எனது, உனது, தனது )

5. நேற்று அம்மா கொழுக்கட்டை ______________________ .

( அவித்தார், அவிப்பார், அவிக்கின்றார் )

6. **நொடி:**

பூக்கும் காய்க்கும் கலகலக்கும்: காகம் இருக்கக் கொப்பில்லை.

அது ______________________ .

( நெல், பனை, தென்னை )

7. சுறா ______________________ வாழும்.

( தரையில், நீரில், நீரிலும்தரையிலும் )

8. மாலை + பொழுது என்பதைச் சேர்த்து எழுதினால்

____________________ .

( மாலைய்ப்பொழுது, மாலைப்பொழுது, மாலைபொழுது )

9. இங்குள்ள பொருள் ____________________ மிகத் தரமுடையது.

( அவற்றுள், ஒவ்வொன்றும், இவற்றுள் )

10. இராவணன் ஆட்சிக்காலத்தில்____________________ தமிழகத்தின் தலைநகராக இருந்தது.

( இலங்கை, இந்தியா, சிங்கப்பூர் )

11. பழனம் என்பது ____________________ .

( வயல், குளம், கடல் )

12. சிறுவன் விளையாட்டுத்திடலில் ____________________ .

( ஓடுகின்றான், ஓடுகின்றனர், ஓடுகின்றது )

13. இயற்கைத்துறைமுகம் அமைந்துள்ள இடங்களில் ஒன்று

____________________ .

( மன்னார், திருகோணமலை, காலி )

14. 500 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால் ____________________ .

( ஐன்னூறு, ஐந்னூறு, ஐந்நூறு )

15. கண்ணகிக்குச் சிலை வடிக்க ____________________ கல் எடுக்கப்பட்டது.

( நீலகிரியில், பொதிகையில், இமயத்தில் )

16. தமிழரது ____________________ க் கூறும் நூல் புறநானூறு.

( வீரத்தை, வீரத்தால், வீரத்துக்கு )

17. தாழம் பூவைவிட நறுமணமுடைய பூ____________________ என ஔவையார் கூறுகின்றார்.

( செவ்வந்திப்பூ, மகிழம்பூ, செவ்வரத்தம்பூ )

18. **குறள்:** தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் ____________________ வினை

( சேர்க்கும், நீக்கும், நோக்கும் )

19. **ஒலிவட்டு :-**

அன்னை பூபதி பிறந்த ஊர் ____________________ .

( வவுனியா, மட்டுநகர், யாழ்ப்பாணம் )

20. **பழமொழி:**

பதறாத காரியம் ____________________ .

( சேராது, சிதறாது, முடியாது )

21. கிளித்தட்டு விளையாட்டில் மறிக்கும் கன்னையின் தலைவரை ____________________ என அழைப்பர்.

( தாய்ச்சி, காய், பழம் )

22. விழுதுகளை உடைய மரம் ____________________ .

( வேம்பு, பலா, ஆலமரம் )

23. காலந்தாழ்த்திச் சென்ற முயலைக் கண்ட சிங்கம்

_____________________ .

( முழங்கியது, பிளிறியது, கத்தியது )

24. _____________________ நன்றாகப் படித்தான்.

( நீ, அவன், நான் )

25. விலங்குகளும் மரஞ்செடிகளும் இன்புறப் பாடும் இசை வல்லான்

_____________________ .

( இராவணன், எல்லாளன், பாரி )

26. சிறு கூலங்கள் விளைந்து வீடு வந்து சேரும் காலம்

_____________________ .

( மாசி, ஆவணி, ஆனி )

27. ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருப்பது _________________ .

( காகம், கிளி, கொக்கு )

28. ஆடிப்பிறப்பன்று _____________________ எல்லோரும் ஆடிக்கூழ் காய்ச்சிக் கூடியிருந்து குடிப்பர்.

( காலையில், மாலையில், இரவில் )

29. காகம் கா கா என்று _____________________ .

( கத்தும், பேசும், கரையும் )

30. பனை மரத்திலிருந்து பெறப்படும் பொருட்களில் ஒன்று

_____________________ .

( தேங்காய், ஒடியல், பாக்கு )

| புள்ளிகள் 30 |
|---|

## 2) கீறிட்ட இடத்தை மிகப் பொருத்தமான சொல்லால் நிரப்புக.

| | | |
|---|---|---|
| பழகப்பழக | வண்ணவண்ண | சாரிசாரியாக |
| பளபள | விடியவிடிய | |

1. எறும்புகள் ______________________ ஊர்ந்து சென்றன.

2. புகழினியின் பட்டுப்பாவாடை ______________________ என மின்னியது.

3. மாணவன் தேர்வுக்கு ______________________ ப் படித்தான்.

4. ______________________ ப் பாலும் புளிக்கும் என்பது பழமொழி.

5. மீன் தொட்டியில் ______________________ மீன்கள் காணப்படுகின்றன.

புள்ளிகள் 05

**3) கீறிட்ட இடங்களில் பொருத்தமான முடிக்கும் சொற்களை எழுதி; சொல்லியங்களை நிறைவு செய்க.**

1. நண்பரிடம் குறை இருந்தாலும் பொறுத்துக்கொள்ள

   ______________________ .

2. சிலப்பதிகாரம் இளங்கோவடிகளால் ______________________ .

3. நான் எனது பிறந்த நாளை நேற்றுக் ______________________ .

4. **பழமொழி :**

   அன்னம் இட்ட வீட்டில் கன்னம் ______________________ .

5. முன்னாளில் ஐரோப்பியர் பலசரக்குகளை வாங்குவதற்காக

   இலங்கைக்கு ______________________ .

| புள்ளிகள் 10 |
|---|

## 4) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

மரங்களிலிருந்து எமக்குப் பல நன்மைகள் கிடைக்கின்றன. மா, பலா, வாழை போன்ற மரங்களில் இருந்து பழங்கள் கிடைக்கின்றன. முருங்கை மரத்திலிருந்து முருங்கைக்காயும் தென்னை மரத்திலிருந்து தேங்காயும் பெறப்படுகின்றன. இவை சமையலுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. வேப்பமரம், இலுப்பைமரம் போன்றன எமக்கு எண்ணெய் வித்துகளைத் தருகின்றன. இவ்வாறு மரங்கள் உணவுத் தேவைகளுக்கு மட்டுமன்றி வீடு கட்டுவதற்கும் பயன்படுகின்றன. வீட்டுப்பொருட்களான இருக்கை, மேசை, கட்டில் என்பனவும் மரத்தால் செய்யப்படுகின்றன. மரத்திலிருந்து பல பயன்கள் கிடைப்பதால் மரங்கள் நாட்டப்பட வேண்டும். அழிக்கப்படக்கூடாது. எனவே நாம் மரங்களை வெட்டாது பாதுகாக்க வேண்டும்.

1. பழங்கள் கிடைக்கும் மரங்கள் இரண்டின் பெயர்களை எழுதுக.

   ________________________________________ .

2. தென்னையிலிருந்து என்ன பெறப்படுகிறது?

   ________________________________________ .

3. வேப்பமரம், இலுப்பைமரம் என்பன எமக்கு எவற்றைத் தருகின்றன?

   ________________________________________ .

   ________________________________________ .

4. மரத்தால் செய்யப்படும் வீட்டுப்பொருட்கள் எவை?

   ________________________________________ .

5. நாம் மரங்களை எவ்வாறு பாதுகாக்க வேண்டும்?

   ________________________________________ .

   ________________________________________ .

புள்ளிகள் 10

5) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.

| | | |
|---|---|---|
| நூல்கள் | பாவற்குளம் | செழிப்பான |
| நண்பர்கள் | உருகுணை | |

எல்லாளன் ஒரு சிறந்த தமிழ் மன்னன். எல்லாளன் அநுராதபுரத்தை 44 ஆண்டுகள் ஆட்சி செய்தான். எல்லாளனது ஆட்சியை கல்யாணி, ________________ ஆகிய இரு சிற்றரசுகள் ஏற்றிருந்தன. எல்லாளனது ஆட்சியில் எதிரிகள், ________________ என்ற வேறுபாடின்றி மக்கள் ஒத்தநிலையில் நடத்தப்பட்டனர். எல்லாளன் வவுனிக்குளத்தைக் கட்டுவித்தான். ________________ , இரணைமடுக்குளம் ஆகியவற்றைக் கட்டும் பணிகள் எல்லாளன் காலத்திலேயே தொடங்கப்பட்டன. இதனால் எல்லாளனது ஆட்சிக்காலம் ________________ காலம் என்று போற்றப்பட்டது. அறந்தவறாத அவனது ஆட்சிபற்றி வரலாற்று ________________ புகழ்கின்றன.

புள்ளிகள் 10

## 6) பாடநூல் வினாக்களுக்கு விடை தருக.

1. கண்ணகி, மாதவி, கோவலன் ஆகியோரின் கதையைக் கூறும் நூலின் பெயர் என்ன?

_______________________________________________

2. வேப்பம்பூவிலிருந்து செய்யப்படும் உணவுப் பண்டம் எது?

_______________________________________________

3. திருமலையில் சுற்றுலாச் செலவரைக் கவருபவை எவை?

_______________________________________________

4. மருந்தாகப் பயன்படும் பலசரக்குகள் இரண்டின் பெயர்களைத் தருக.

_______________________________________________

5. பழந்தமிழ் நூல்களான ஏட்டுச்சுவடிகளை அச்சேற்றியவர் யார்?

_______________________________________________

புள்ளிகள் 10

## 7) பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

| | | | | |
|---|---|---|---|---|
| பிடிக்க | கேட்டு | கலந்து | கற்ற | செல்ல |

1. செழியன் மாவீரர் விளையாட்டுப் போட்டியில் ____________________ கொண்டான்.

2. நாம் ____________________ கல்வியை மறக்கக் கூடாது.

3. பூனை எலியைப் ____________________ ஓடியது.

4. மக்கள் வீதியில் செல்லும்போது கவனமாகச் ____________________ வேண்டும்.

5. யாழினி பாடிய பாடலைக் ____________________ அவையோர் மகிழ்ந்தனர்.

புள்ளிகள் 05

**8) கீழே தரப்பட்டுள்ள சொற்களை உங்கள் வாழிட மொழியில் எழுதுக.**

1. காடு - ______________________________

2. அஞ்சல் - ______________________________


3. ஓவியம் - ______________________________

4. நண்பன் - ______________________________

5. விளையாட்டு - ______________________________

| புள்ளிகள் 05 |
|---|

9) தரப்பட்டுள்ள படத்தை வைத்து, 30 சொற்களுக்குக் குறையாமல் கதை எழுதுக.



________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

புள்ளிகள் 15

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL